அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல: 17/89

அரசாங்க நிருவாக, மாகாணசபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு- 07,
1989, மார்ச்சு 23 ஆந் தேதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களங்களின் தலைவர்கள் அனைவருக்கும்.

ஒழுக்காற்று விசாரணைகளை விரைவாக நடத்தி முடித்தல்

இந்த விடயம் பற்றி இந்த அமைச்சினால் பல சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்ட போதிலும் ஒழுக்காற்று விசாரணைகளைத் தீர்வு செய்வதில் மட்டுமிஞ்சிய தாமதம் இருப்பதாகக் காணப்பட்டுள்ளது. இத்தாமதம் உத்தியோகத்தருக்கும் அவர் சேவையாற்றும் அமைப்பிற்கும் தீங்கானதாகும். இது இன்னொரு வடிவத்திலான விரயமாகும்.

02. எனவே ஒழுக்காற்று விடயங்களைக் கையாளுவதில் அமைச்சுகளும் திணைக்களங்களும் பின்வரும் செயற்பாட்டுக்கால எல்லை அட்டவணையைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(அ) இடைநிறுத்தத் தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் இடை நிறுத்தப்பட்ட உத்தியோகத்தருக்கெதிரான குற்றப்பத்திரம் வழங்கப்படல் வேண்டும்.

(ஆ) அவசியமான போது குற்றப்பத்திரத்திற்குப் பதில் கிடைத்த தேதியிலிருந்து இரண்டு கிழமைக்குள் விசாரணை நியாயசபை நியமிக்கப்படல் வேண்டும். அத்துடன்;

(இ) நியாயசபை நியமிக்கப்பெற்ற தேதியிலிருந்து மூன்று மாத காலத்துக்குள் ஒழுக்காற்று விசாரணை முடிக்கப்படல் வேண்டும்.

03. மேலே குறிப்பிட்ட கால எல்லை அட்டவணையில் குறிப்பிடப்பட்டதன் படி நடவடிக்கை மேற்கொள்வதில் தாமதம் ஏற்பட்டால் அத்தாமதத்திற்கான காரணத்தைத் திணைக்களத் தலைவர் விளக்குதல் வேண்டும். விளக்கம் திருப்திகரமானதாக வில்லாமலிருந்தால் இவ்விடயத்தைச் செயலாளர் திணைக்களத் தலைவரின் ஆளுக்குரிய கோப்பில் குறித்தல் வேண்டுமென்பதுடன் திணைக்களத் தலைவரின் பங்கிலான தவறுகள் நியாயமானவொரு எண்ணிக்கையை விஞ்சினால் அது அவருடைய சம்பள வேற்றக் கொடுப்பனவு மீள்நோக்கப்படும் போது அவருக்கு எதிரானதாகக் கொள்ளப்படலாம்.

04. ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் பத்திரங்களின் பகுதியாகவிருப்பது திணைக்களத்தினால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதில் தாமதத்தை ஏற்படுத்தும் காரணங்களில் ஒன்றாகவிருப்பதாகக் காணப்பட்டுள்ளது. அத்தகைய விடயங்களில் நீதி மன்ற நடவடிக்கை பூர்த்தி செய்யப்படும் வரை காத்திராமல் உடனிகழ்வாகத் திணைக்கள நடவடிக்கை எடுக்கப்படுவதற்காக ஆவணத்தின் சான்றுப்படுத்திய பிரதிகளை ஒழுக்காற்று அதிகாரி வைத்திருத்தல் வேண்டும்.

05. இத்தொடர்பில் இதற்கு முன்னர் வழங்கப்பட்ட பின்வரும் அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளுக்கு உங்களது அவதானம் கோரப்படுகிறது.

இல 97 - 73.11.09 ஆம் திகதி.
இல 83 74.04.29 ஆம் திகதி.
இல 133 79.02.08 ஆம் திகதி.
இல 186 81.01.13 ஆம் திகதி.
இல 218 23.04.12 ஆம் திகதி.

ஒப்பம்: சிறில் [illegible]கே.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாணசபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.

நளி/23.